இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (10.07.2024) சென்னை, மேற்கு மாம்பலம், பாஷ்யகார ஆதி சென்ன கேசவப் பெருமாள் திருக்கோயிலில் ரூ.59.40 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மரத்தேர் உருவாக்கும் பணிகளை தொடங்கி வைத்தார். உடன் மண்டல இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாநகராட்சி மன்ற உறுப்பினர் எம்.ஸ்ரீதர், திருக்கோயில் செயல் அலுவலர் கே.செந்தில் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சிதம்பரத்தில் - கனகசபை மீதேறி தரிசனம் செய்ய அனுமதி

சமூக நீதியை நிலைநாட்டுகின்ற அரசாக திராவிட மாடல் அரசு திகழ்கிறது!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

சென்னை, ஜூலை 11-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (10.07.2024) சென்னை, வியாசர்பாடி, இரவீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.1.98 கோடி மதிப்பீட்டிலான திருப்பணிகளையும், மேற்கு மாம்பலம், பாஷ்யகார ஆதி சென்ன கேசவப் பெருமாள் திருக்கோயிலில் ரூ.59.40 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மரத்தேர் உருவாக்கும் பணிகளையும் தொடங்கி வைத்தார்.

பின்னர், மேற்கு மாம்பலத்தில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்த தாவது :-

முதலமைச்சர் அவர்கள் ஆட்சி ஏற்பட்ட பிறகு, இந்து சமய அறநிலைத்துறைக்கு திராவிட மாடல் ஆட்சி ஒரு பொற்கால ஆட்சி என்று பறைசாற்றும் வகையில் எங்கு பார்த்தாலும் திருப்ப ணிகள், குடமுழுக்குகள், தேர்த் திருவிழா க்கள், தெப்ப உற்சவங்கள், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகள் என பல்வேறு திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஒரு கால பூஜைத் திட்ட திருக்கோயில்களுக்கு வைப்பு நிதி ரூ.2.50 லட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதோடு, மாதந்தோறும் அத்திருக்கோயில்களின் அர்ச்சகர்களுக்கு ரூ.1,000 ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. ஒரு கால பூஜைத் திட்ட அர்ச்சகர்களின் குழந்தைகளின் உயர்கல்வி பயில 400 நபர்களுக்கு கடந்தாண்டு தலா ரூ.10,000 கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டது. இந்தாண்டு 500 மாணவர்களுக்கு வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். 2,500 கிராமப்புறத் திருக்கோயி ல்கள் மற்றும் 2,500 ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வசிக்கின்ற பகுதிகளில் இருக்கின்ற திருக்கோயில்கள் என 5,000 திருக்கோயில்களுக்கு ரூ.100 கோடி திருப்பணிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம், மேற்கு மாம்பலம், பாஷ்யகார ஆதி சென்ன கேசவப் பெருமாள் திருக்கோயிலில் ரூ.59.40 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மரத்தேர் உருவாக்கும் பணிகளை தொடங்கி வைத்தோம். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 97 திருக்கோயில்களுக்கு ரூ.58.82 கோடி மதிப்பீட்டில் புதிய மரத்தேர் உருவாக்கும் பணிகளும், ரூ.13.38 கோடி மதிப்பீட்டில் 50 மரத்தேர்களில் மராமத்துப் பணிகளும் மேற்கொள்ள ப் பட்டு வருகின்றன.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான், ஆட்சியின் மீதும் இந்து சமய அறநிலையத்துறையின் மீதும் வைத்திருக்கின்ற நம்பிக்கையின் காரணமாக உபயதாரர்கள் இதுவரை 920 கோடி ரூபாயை வழங்கி இருக்கின்றார்கள். திருக்கோயில் வாடகை நிலுவைத் தொகை 720 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டிருக்கின்றது. அதேபோல் எந்த காலத்திலும் இல்லாத அளவிற்கு இந்து சமய அறநிலையத் துறைக்கு அரசு மானியமாக ரூ.900 கோடியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதுவரையில் வழங்கி இருக்கின்றார்கள். அதில் 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில்களை புனரமைத்து பாதுகாக்க மட்டும் ரூ.300 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் வரை 1,855 திருக்கோயில்களில் குட முழுக்கு நடைபெற்றுள்ளது. 66 ஆண்டுகளுக்கு பிறகு பாம்பன் சுவாமிகள் திருக்கோயிலு க்கும், 100 ஆண்டுகளுக்கு பிறகு திருச்சி மாவட்டம், பூர்த்தி கோவில் திருமுக்தீஸ்வரர் திருக்கோயிலுக்கும், பெரியபாளையம், பவானியம்மன் திருக்கோயிலுக்கும் வருகிற 12 ஆம் தேதி குடமுழுக்கு நடைபெற உள்ளது. இப்படி எண்ணற்ற திருப்பணிகளை மேற்கொண்டு பணியாற்றி வருகின்ற இந்து சமய அறநிலையத்துறைக்கு தமிழ் நாடு அரசு எல்லா வகையிலும் ஒத்துழைப்பு நல்கி வருகிறது.

சென்னை, ராயப்பேட்டை, துர்கையம்மன் திருக்கோயில் இராஜகோபுரத்தை அகற்ற வேண்டுமென்பது எண்ணம் அல்ல. மெட்ரோ ரயில் வழித்தடத்திற்கான வரைபடங்களை தயாரிக்கின்ற போது அக்கோயிலின் கீழ் மெட்ரோ பணிகள் மேற்கொள்ள வேண்டிய நிலை இருப்பதால் அப்பணிகளை தொடங்குகின்ற போது ஸ்திரத் தன்மை இல்லாமல் இராஜகோபுரத்தில் பாதிப்பு ஏற்படும் என்பதால் அதை அகற்றுவதற்கு சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக தற்போது நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் நீதிமன்றம் என்ன அறிவுரை கூறுகின்றதோ அதற்கு உட்பட்டு நிச்சயம் இந்த அரசும், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனமும், இந்து சமய அறநிலையத்துறையும் செயல்படும்.

இன்றைக்கு ஒரு மகிழ்ச்சியான நாள். சமூக நீதி மறுக்கப்படுகின்ற பல்வேறு மாநிலங்களில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைந்திருக்கின்ற திராவிட மாடல் ஆட்சியானது தமிழ்நாட்டில் சமூகநீதியை நிலைநாட்டுகின்ற அரசாக செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. சிதம்பரம் நடராஜர் திருக்கோயிலில் கனக சபை மீது பக்தர்களை அனுமதிக்காத நிலையில் முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு தான் நீதிமன்றத்தின் மூலம் கனக சபையில் மீதேறி தரிசனம் செய்வதற்குண்டான உரிமையை பெற்று தந்தோம். திருமஞ்சனம் என்று காரணம் காட்டி, விழாக் காலங்களில் யாரையும் கனகசபையில் ஏற்றாத நிலையில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் திருமஞ்சனத்திற்கு கூட கனகசபையில் பக்தர்களை சட்டத்திற்கு உட்பட்டு அனுமதிக்க வேண்டும் என்ற உத்தரவிட்டதைத் தொடர்ந்து, இன்று காலை முதல் பக்தர்கள் மகிழ்ச்சியோடு கனகசபை மீதேறி சுவாமியை தரிசித்துக் கொண்டிருக்கின்றனர் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்து திராவிட மாடல் ஆட்சியிலே சமூக நீதி நிலைநாட்டப்படுகிறது என்பதற்கு இதை ஒரு உதாரணமாக சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

சென்னை தென் மேற்கு மாவட்ட திமுக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட துணை அமைப்பாளர் கோயில் தி.ரமேஷ் ர. ஆலையம்மாள் ஆகியோரின் இல்ல நிகழ்ச்சியில் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணை தலைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. புனிதவள்ளி கருணாநிதி, நீதியரசர் சுபாலட்சுமிகாந்தன், மாணவர் அணி எஸ்.மோகன், சென்னை தென் மேற்கு மாவட்ட இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் அ.ராஜாஅன்பழகன் MC, 141 வது (அ) வட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் எஸ்.லட்சுமிகாந்தன், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் ச.சண்முகநாதன் மற்றும் மாநில மாவட்ட பகுதி வட்ட கழக செயலாளர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளரும், சிதம்பரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.பாலகிருஷ்ணன் சகோதரர் கே.ராதாகிருஷ்ணன் இயற்கை எய்தினார். தகவலறிந்த அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அன்னாரின் உடலுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். கே.பாலகிருஷ்ணன் மற்றும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்,.உடன் காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.செ.சிந்தனைச் செல்வன், மற்றும் தி.மு.க கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர்

கே.பாலகிருஷ்ணன் சகோதரர் கே.ராதாகிருஷ்ணன் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 11-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் கே.பால கிருஷ்ணன் அவர்களின் இளைய சகோதரர் கே.இராதா கிருஷ்ணன் (வயது 66) , சிதம்பரம் அருகே அண்ணாமலை நகர் பேரூராட்சிக்குட்பட்ட திடல் வெளி பகுதியில் வசித்து வந்த நிலையில் நேற்று முன்தினம் (9.7.2024 - செவ்வாய்க்கிழமை) மாலை உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார்.

அன்னார் மறைவுற்ற செய்தியறிந்து அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த

செய்தி வருமாறு:-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் கே.பால கிருஷ்ணன் அவர்களது சகோதரர் ராதாகிருஷ்ணன் அவர்கள் மறைந்த துயரச் செய்தியறிந்து, தோழர் பால கிருஷ்ணன் அவர்களைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தேன்.

ராதாகிருஷ்ணன் அவர்களது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினர் - உறவினர்கள் - நண்பர்கள் என அனைவருக்கும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கலாநிதி வீராசாமி , ஜே.ஜே.எபினேசர் முன்னிலை ! என்.மருது கணேஷ் தலைமையில்

மொழிப்போர்த் தியாகி பார்வதி நாராயணசாமி முதலாம் ஆண்டு நினைவேந்தல் ! உணவு - நலஉதவிகள் !

ஆர்.எஸ்.பாரதி - டி.கே.எஸ்.இளங்கோவன் - இரா.கிரிராஜன் பங்கேற்பு !

சென்னை ஜூலை:11

சென்னை மாநகராட்சி முன்னாள் மாமன்ற உறுப்பினரும், முன்னாள் தலைமை பொதுக்குழு உறுப்பினரும் மொழிப் போர் தியாகியும், வழக்கறிஞர் என்.மருது கணேஷ் அவர்களுடைய தாயாருமான பார்வதி நாராயணசாமி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்ச்சி வழக்கறிஞர் என்.மருதுகணேஷ் தலைமையில் டாக்டர் கலாநிதிவீராசாமி எம்.பி,ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலையில் வட்டச் செயலாளர் ச.தமிழ்ச்செல்வ ன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர். பொன்இளவரசன், மாவட்ட பிரதிநிதிகள் மா.ரூபசங்கர், பி.கே.மூர்த்தி, ஆகியோர் வரவேற்புரையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி பங்கேற்று பார்வதி நாராயணசாமி திருவுரு வப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு உணவு மற்றும் புடவை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன்,சட்ட திட்ட திருத்தக்குழு செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி, சென்னை மாநகர அரசு முதன்மை வழக்கறிஞர் ஜி. தேவராஜன்,குமரி விஜயகுமார், தா.இளைய அருணா, ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

இதில் மாவட்ட துணைச் செயலாளர் நாகம்மை, ஜி.எம். தேவன், வே.சிவக்குமார், கி. ராஜேந்தி ரன், நா.சண்முகம், ப.சோமசுந்தரமூர்த்தி, ஏ.டி. மணி,வெ.சு. சத்தியநாராயணன், எஸ்.எம்.பரசுராமன், எம்.விமலா, ஏ.ரமேஷ்பாபு, வண்ணை மோ கன், ஆர். டி.ராஜா, கே.பி.சதீஷ்குமார், எம்.வேதலட்சுமி, மாஸ்.டி. வெங்கடேசன், கு.ரமேஷ், நா.கஜேந்திரன், வட்ட செயலாளர்கள் நேதாஜி யு.கணேசன் எம்.சி, என்.எம்.கதிரேசன், நா.கோதண்டன், ஜி.ஏழுமலை, எல்.ரமேஷ், நெல்லை எம்.எம்.சாமி, வி. முத்து, ஜெ. சுரேஷ்பாபு, டி.ஆர்.தணிகாசலம், எஸ்.திருப்பதிசாமி, வி.அன்பு, லேலண்டு மோகன், அறிவகம் கலை, ப.ஆ.சண்முகம், எஸ்.கே.இளங்கோ, வானூர் கே.ராஜி, உசுரு (எ) அப்துல் ரகுமான், கோ.ஹரிராமன், டி.ஜனா, ஜெ.மகேஸ்வரி, எம்.கலைவாணி, டி.லெனின், என்.பிரேமதாசன், இ.கார்த்திக், எரிமலை பாலு,பி.செல்வராஜ், பாம்பே லட்சுமி, தங்கராமு, ராயபுரம் உமாபதி, பிரான்சிஸ் சேவியர், முகமது கவுஸ், எஸ்.மதியழகன், ஆர். பத்மநாபன், ஏ.எஸ்.குலசேகரன், தெய்வம் இளங்கோ, டில்லிதுரை, விஜேஸ், மைக்கேல் ராஜ், எம்.எஸ்.இரவி, துரை, வழக்கறிஞர்கள் கே.பொம்முராஜ், ஜி.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.பி.எஸ்.புத்தன், எஸ்.சேகர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பெரி. அழகு

ஜூலை 11 (1997)

கழகம் துவங்கிய காலத்திலிருந்தே கழகப் பணியாற்றியவர். திருப்பத்தூர் தொகுதியின் வட்டச் செயலாளராக பல ஆண்டுகளாகப் பணியாற்றியவர். பின்பு இராமநாதபுரம் மாவட்டப் பொறுப்பாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

சிவபுரிபட்டி ஊராட்சித் தலைவராகவும், சிங்கம்புணரி ஒன்றியப் பெருந்தலைவராகவும் பணியாற்றி மக்களிடம் நற்பெயர் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதுடன், குறிப்பாக இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும் – மிசா கைதியாக ஓராண்டு காலம் மதுரை மத்திய சிறையில் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

10 ஆம் ஆண்டு நினைவு நாள்

தோற்றம் 01.07.1933



மறைவு 10.07.2014

(முன்னாள் ஒன்றிய அவைத் தலைவர்)

பெரும்பாக்கம் **ச.தட்சணாமூர்த்தி** அவர்கள்

எமர்ஜென்சி காலத்திலே கருப்பு சிவப்பு துண்டோடு வீரநடை போட்டவர் என்று தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் :–

மகன்கள் : **த.செந்தமிழ்ச்செல்வன்**

(நினைவில் வாழும்) **த.தமிழ்நேசன்** (மு.மா.பி)

மகள்கள் : **வி.பைந்தமிழ்ச்செல்வி**
பி.தமிழ்வாணி, சு.தமிழ்ச்செல்வி

மற்றும் மருமகன்கள், மருமகள்கள், பேரப் பிள்ளைகள்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சீர்காழி வை. ஞானசேகரன்

ஜூலை 11 (2014)

அண்ணாமலைப் பல்கலை கழகத்தில் தமிழ்ப் பெருமன்ற செயலாளராக – மாணவர் திராவிட கழகத் தலைவராகவும் இருந்தபோது மாணவர்களை ஒருங்கிணைத்து தமிழின உணர்வு பொதுக்கூட்டம் தமிழீழ ஆதரவு பொதுக்கூட்டங்களை தொடர்ந்து நடத்தியதோடு, முதன்முதலாக தந்தை பெரியார் படத்தை திறந்து வைத்தவர்.

ஈழத் தமிழர்களுக்காக நடைபெற்ற அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றவர்.

கீழத் தஞ்சை மாவட்ட தி.க. செயலாளராக இருந்தபோது, ஈழத் தமிழர்களுக்கு மயிலாடுதுறையில் மிகப் பெரிய மாநாட்டை நடத்தியவர்.

அண்ணாமலைப் பல்கலை கழகத்தில் படிக்கும்போது மிசாவை கடுமையாக எதிர்த்து மாணவர்களிடம் துண்டறிக்கை வழங்கியவர்.

சீர்காழி ஒன்றிய பெருந்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, 'கலைஞர் செம்மொழி நூலகம்', 'தளபதி மு.க.ஸ்டாலின் சிறுவர் விளையாட்டரங்கம்' ஆகியவற்றை அமைத்து, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்

தலைமைக் கழகம்
தி.மு.க.